[2012 ஏப்ரல் 4

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 49, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

49—

கட்டட வசதி

*__5402—திரு. க. பாலகிருஷ்ணன்:__

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் அரசு மருத்துவமனையில் சித்த மருத்துவப் பிரிவிற்கென தனிக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சிதம்பரம் அரசினர் மருத்துவனையில், சித்த மருத்துவப் பிரிவிற்கென்று இருந்த தனிக் கட்டடம் 20 ஆண்டுகளுக்கு மேலாகியதால் தற்பொழுது இடிக்கப்படவுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு சித்த மருத்துவப் பிரிவிற்கென்று தனிக் கட்டடம் கட்ட 2012–2013 ஆம் ஆண்டிற்கான பகுதி–II திட்டத்தின்கீழ் ரூ.37.00 இலட்சம் ஒதுக்கியுள்ளது. நடப்பு நிதி ஆண்டிலேயே கட்டடம் கட்டப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள். உங்கள வினாவை சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 40 ஆண்டுக்கால கோரிக்கையான சிதம்பரம் காமராஜர் அரசு மருத்துவமனையில் சித்த மருத்துவப் பிரிவிற்கென இந்த ஆண்டு

2012 ஏப்ரல் 4]

ஏறக்குறைய ரூ.37.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டடம் கட்டும் பணி துவக்குவதாக அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் சிதம்பரம் தொகுதி மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 50, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

50—

இருவழிப் பாதை

***6257—திரு. மு. அருண் சுப்பிரமணியன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச் செல்லும் மலைப் பாதையை இருவழிப் பாதையாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் நிருவாகம் இணை ஆணையர் / செயல் அலுவலராலும் மற்றும் தக்காராலும் கவனிக்கப்பட்டு வருகிறது. இதன் ஆண்டு வருமானம் ரூ.16,09,71,192/– ஆகும். திருமுருகப் பெருமானின் அறுபடை வீடுகளில் ஐந்தாம்படை வீடாகத் திகழும் சிறப்பு பெற்ற இத்திருக்கோயில் 270 அடி உயரம் கொண்ட பெரிய குன்றின்மீது அமைந்துள்ளது. மலைக்கோயிலுக்குச் செல்லும் பாதை 1,600 மீட்டர் நீளம் கொண்டது. இம்மலைப் பாதை குறைந்தபட்ச அகலம் 7.20 மீட்டர் முதல் அதிகபட்ச அகலம் 15 மீட்டர் வரை கொண்டதாகும். இப்பாதை இருவழிப்பாதை கொண்ட சாலையாகும். மாண்புமிகு